உ

கடவுள் துணை.

திருவலலிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமான்பேரில்

பலசரக்கு

கப்பல் ஏலப்பாட்டு.

இஃது.

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசை.

ஏழுமலைப்பிள்ளை

அவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1895.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமகாபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு

கப்பல்வலப்பாட்டு.

எலேலோ-குருபாதம்-அம்பாள்-விநாயகனே-முன்னடவாய்-நான்முகன்றன் சாஸ்வதியே - எந்தனுவிலுள்ளேவாருமம்மா-சீர்பொழியுந் திருவல்லிக்கேணியெனும் புரிதனிலே- வாசமாகவீற்றிருக்கும் - பார்த்தசாரதியுந் தேவியுடன்-வேதவல்லித்தாயார்க்குகப்பல்- காணிக்கைகள்வெகுவிதமாய்-பாரமுடன்சரக்குகட்டி யோடிவரும் சம்மதிக்க.

(சரூர்) நாழிகையொன்றுக்குநானூறுகப்பல் - நாடோறுந்தப்பாமல்தினமவந்திறங்கும்-சீருடையயடித்துறைக்குகப்பல்வருஞ்செய்தி-சென்னப்பட்டணங்கோட்டைசெனங்களெல்லாங்கேட்டு பூரித்துஆனந்த சந்தோஷமாகப்-புதுமைகள்பார்க்கவந்துகரைதனிலேநிற்க- பாரியவர்த்தகர்ள்செட்டிகோமுட்டி- பட்டணத்திலுள்ளகுடியின்னஞ்சிலபேர்கள்- வேணுமென்றசரக்குகள்வேண

படிகொள்ள- மாட்டதனில்பணங்கொண்ர்ந்துவந்தவர்க ளிங்கே-போனபேர்பெற்றசென்னைபுரியாளும்- பெரி யதுரைசின்னதுரையெல்லாரும்கேட்டு-நாடாளுமிங்கிலீ ஷ்க்கொடிக்காரரெல்லாம் - நாலாயிரஞ்செனங்கள்வந்து மேநிற்க-ஓடாததண்ணீரிலங்கர்கள்பாய்ச்சி - யொருபுற மாய்கப்பலெல்லாங்கரைதனிலேசேர்க்க - வேதவல்லித் தாயார் கடாக்ஷத்திலேவேகமுடன் கப்பல்வந்துசேர் ந்ததையாசுவாமி (ஏலேலோகுருபாதம்) (க)

பொங்கிவருங்கடலோரங்- தாயார்பூமகளாஞ்சந்நிதி க்கே-மங்களமாம்சரக்குகப்பல்- இங்கேவந்திறங்கும்படி த்துறைக்கு-நிரம்பிவருஞ்சரக்குகட்டி-நேரபாரத்துடன் கனத்துவரும்-தங்கிவரும்வழிகளிலே- சற்றேதாமதங்க ளில்லாமல்.

(சரூர்) எங்கெங்கதீவாந்தரத்திலிருந்து - எண்ணி சொல்லிமுடியாதசரக்குகளைக்கொண்டு- பஞ்சவர்ணக்கி ளிகொஞ்சும்பங்காளதேசம்-பலவிதமாநெல்விளையும்பா ல்வடியுஞ்சம்பா - சிறுசம்பாபெருசம்பாசீரகச்சம்பா-சி றுமணியும்பெருமணியுஞ்சிறுராசிநெல்லு-கொடிசம்பா மணக்கத்தைகுங்குமச்சம்பா-கொத்துமுத்துச்சம்பாகு டைமல்லிச்சம்பா-மல்லிகைச்சம்பா மணமுள்ளசம்பா- வங்காளதேசத்தில்வாலரிநெல்லு-அனுமந்தசம்பா

அளவற்றசம்பா-அந்தந்ததேசத்தில்விளைந்துவரும்நெல்லு-கடுகுசம்பாமிளகுசம்பாகற்பூரசம்பா- கன்னியரிசியுடன்கருப்புநெல்லரிசி-சோணைமழைபொழியும்நல்ல மலையாளதேசம்-துள்வெள்ளைநெல்விளையுந் தும்பைப்பூசம்பா·சரியமாபர்வதத்தில்விளைந்துவருஞ்சம்பா-சமுத்திரத்தில்விளைந்துவருஞ்சடைச்சம்பாநெல்லு - சாதகோகாவளையில்விளைந்துவருஞ்சம்பா-சதுரானதேசத்தில்விளைந்துவரும்நெல்லு-காசிதேசத்தில் விளைந்துவருஞ்சம்பா-கன்னியாகுமரியில்விளைந்துவரும்நெல்லு ஸ்ரீரங்கராசருக்குவிளைந்துவரும்நெல்லு- திருவரங்கநாயகிக்குவிளைந்துவருஞ்சம்பா-செம்பாளைபூம்பாளைசுகதாதியரிசி - கல்லுண்டைநெல்லுண்டைகார்போகத்தரிசி-கட்டையரிசியுடன்கப்பலுள்ளதினுசு-மலைதுவரைசிறுதுவரை கடலைபயர்உளுந்து-மற்றுமங்கோதுமைநவதானியசோளம்-கரிமஞ்சள்பொடிமஞ்சள்காரமுள்ளமஞ்சள்- கப்பமஞ்சள்சாயமஞ்சள்புங்காளமஞ்சள்-மலைதேன்கள் சிறுதேன்கள்கொடிதேன்களெல்லா- நாவுக்கிசைந்ததொருதிராட்சிகளும்-தேன்பாகுமணப்பாகுசீர்மைகற்கண்டு- சீனிசர்க்கரையோடுசேர்ந்த நல்லபெல்லம்- ஈச்சம்பெல்லம்பனங்கற்கண்டுஉள்ளிவெங்காயம்-காச்சிருக்கும்புளிச்சக்கைநீரடிமுத்துகள்-களிப்பாக்குசிறுபாக்குகல்யாணப்பாக்கு

கற்றகாம்புகில்வத்திகாட்டுக்கொம்பரக்கு - கம்மாருகச்
சோடுவெற்றிலைகள்நல்ல- கடல்முத்துசுண்ணும்பு கார
முள்ளபுகையிலை-சீரகம்பெருங்காயம் சதகுப்பையுமம்-
சேர்ந்தொருவெந்தயமும்கொத்தமல்லிவிரையும் - கடு
குகள்மிளகுகள்களிச்சிக்காயேலம் - கடுக்காய்பூசிறுலவ
ங்கப்பட்டையொடுபத்திரி-சுக்குதிப்பிலிமோடி செவிய
மொடுகோஷ்டம்-சடாமாஞ்சி அதிமதுரம் கண்டுபாங்
கி-சிற்றரத்தைசிறுதேக்குசெந்தூரம் தும்ராஷ்டம்-சிறு
நாவல்பூவோடுகுரோசாணிவோமம் - மற்றுமந்தவாய்வி
ளங்கமாட்டியமொக்கு - பரங்கிச்சக்கைகருஞ்சீரகங்க
ட்டுச்சீரகம்- அதிமதுரம்லவங்கப்பூதாளிச்சபத்திரி அ
க்கராகாரங்கள்கடுகுரோகணியும்-கற்பூரதினுசுகள்கட்டி
ச்சாம்பிராணி -காரமுடன்மெழுகுகள்கட்டிகுங்கிலியம்-
வெண்காரம்புளிகாரம்படிகாரம்நவாச்சாரம் - இந்துப்பு
பாலுப்புசயிந்துப்புலவணங்கள்- அத்திநாத்தோடுசெந்
தூரப்பச்சை-சித்திரங்களெழுதநல்லஅரிதாரநீலம்-ஏலக்
காய்சாதிக்காய்வால்மிளகுலவங்கம் ஏற்றமுள்ளசாதிக்
காய்பட்டைகுங்குமப்பூ- கஸ்தூரிகோரோசனங்களும்ந
ல்ல-கமகமென்றுவர்ச்சிக்கும்பச்சைக்கற்பூரம்-சந்தனக
ட்டையின்சட்டங்கள்புனுகு- சவ்வைபன்னீர்கள்கதம்ப
ப்பொடிஅத்தர்-பச்சிலைக்கிச்சிலிகிழங்குகள்பில்லை-பரிம
ளம்வீசிவரும்கஸ்தூரிமஞ்சள்-சந்தனதைலங்கள்-சாம்

பிராணிவத்தி-சம்பங்கித்தைலங்கள் கிலெண்ணெய்ப்பீப்
பாய்·ஸ்ரீகந்தம்அகில்கட்டைதேவதாரிகள்- தீயிலுள்ளசா
குகள்அபுரூபவஸ்து-மலைவேர்கள் மலையாளசஞ்சீவிநல்ல
கிலவேம்புவிஷமுஷ்டிவேம்புடன்சூர்ணம்- செந்தவனை
ப்பிழைப்பிக்குஞ்சஞ்சீவிமருந்து·வெட்டுண்டகாயங்கள்
ஒட்டநல்லமருந்து-வாழாதபெண்களுக்குவாழ்வுதருமரு
ந்து-மைந்தரில்லாமலடிக்குபிள்ளைதருமருந்து-குற்றங்க
ள்குறைதீர்க்குங்குணமுள்ளமருந்து-ஆணுடனேபெண்
பிரிந்துஅலைந்துகெட்டபேனை- ஆசையுடன்கூட்டிவைக்
கும்அந்தரங்கமருந்து-தேசாந்திரம்வோடி திகைகெட்ட
பேனை·சீக்கிரமாகொண்டுவந்துசேர்க்குநல்லமருந்து- இ
த்தனைமருந்துவகைஇனிசொன்னதினுசு- இன்னம்பின்ன
ஞ்சரக்குவகைபேர்சொல்லக்கேளும்- பேர்சொல்லாசர
க்குவகைஆயிரங்கோடி-பேர்சொல்லுஞ்சரக்குவகைபதி
னாயிரங்கோடி-இத்தனைசரக்குவகைஎடுத்துமேட்டி-இ
சைவுடனேகப்பலெல்லாமொருவழியாய்கள்ளி- பத்திர
மாய்வழிகளிலேதண்ணீரெல்லாந்தாண்டி- பலசரக்குகப்
பல்வந்துசேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ)

இன்னம்பின்னஞ்சரக்குவகை நல்லயேற்றமுளளசப்
பலிலேஎண்ணிசொல்லிமுடியாது·கொஞ்சஞ்சுருக்கமுட
ன்சொல்லுகிறேன்- கப்பலில்லிருந்தினுசுகளை நம்மால்க
ணக்குசொல்லிமுடியாது.

(சரூர்) பட்டுகள்தாபிதாபச்சைபட்டுபக்மல்-பங்கா
ளதேசத்துப்பர்க்களாதுண்டு-சாதாதுப்பட்டி சலவையு
ருமாலை -சரிகைநெய்தபிடவைகள்சாயமுள்ளதோப்பு -
மெத்தைக்குத்தகுந்தநல்லமேல்பட்டுஜாலர்- விதவிதமாக
வைசல்லாவெண்பட்டுசேலை-மேலுக்கழகானதொருமாக்
ளம்பூபட்டு-மக்காவிலவெண்பட்டுமைமைசெங்காப்பு-ப
ங்காளபட்டுடன்பஞ்சவர்ணச்சேலை-அச்சமாய்கட்டநல்ல
கச்சைபீதாம்பரம் - ஆத்துருபவழக்காடு பாக்குவர்ணச்
சேலை ஐதராபாக்கத்தில் தாட்டிபத்திரிசேலை - மிஞ்சிமு
டுக்கானதொருகஞ்சத்துசேலை-மேலானமேற்கித்திச்சே
லத்துச்சேலை-கொண்டுபோட்டச்சேலைகொண்டதொரு
கோடி-கட்டாரிபட்டுடன்பட்டுவர்ணச்சேலை - மேலானச
வுளிகள் இரெட்டையகுலுக்கி - கண்டதொரு புலியூரில்
கொள்ளுநல்லசேலை-நிலையங்கிபாகைகள்நீண்டிருக்கும்
குல்லா-நிசாருடன்பாவாடையருமாலைசவுக்கம்-நடுக்கட்டு
ரவிக்கைகள்நாலுவிதம்சீட்டி- நார்மடியும்மடிசஞ்சி தோர்
தைக்குங்கித்தான்-ஜார்ஜிக்கும்சகலாத்து சன்னகாவிளை
யல்-சட்டமுடன்துப்பட்டிபங்களோக்கு- பார்வைக்கு
மோகிக்குஞ்சீமைநூல்பட்டு - பட்டணத்துபெண்களுக்
குவாங்கநலைபுடவை -முத்துகள்கலுகள் முத்துரத்னக்
கெம்பு-மோகனமாலைகளும்முத்துசரமாலை- நற்பவழஞ்
சாதிலிங்கம்நாலுவிதபச்சை- நவரத்னகல்லுகள்நாகரீக

ரவிக்கை-வச்சிரங்கள்வயிடூரியம்மாணிக்கநீலம் - மஞ்ச
ணிறம்கோமேதகம்புட்பராகங்கள்-மலிந்தவிலைதருப்புக
ள்மாங்காளிப்பச்சை-மற்றுமந்தக்கப்பலிலே முத்துவங்
கு திணுசு - கோர்வைகொலுசுகளுங்கையிலிடும்முத்து -
கோடானகோடிகல்லிழைத்தபாட்டில்- அடுக்குவளையல்
தோள்வளையல்அதுகுண்டுவங்கி- அழகானபாஜிபந்துகை
யிலிடுங்கொலுசு-கண்டசரம்சரப்பளிகள்கடல்முத்துமா
லை-கல்லிழைத்தபட்டயஞ்சமுக் கிலிடுங்கெண்டி-ஆரங்க
ள்பதக்கங்கள் அட்டிகைகள்நல்ல-அதுகளுக்குமேலானம
கரகண்டிகைகள்-காதுகள்நிறைந்திருக்குங்கத்திரிப்பாவ
ல்கள்-கம்மலிடுஞ்சிமிக்கிசரமகாதுக்கைசவாளி - ஆணி
முத்துகல்லிழைத்த அடுக்குமூக்குகம்பி அழகானபுலாக்
கு அன்னமூக்குத்தி - கலிக்கத்துராகல்லிழைத்த சுட்டி
யொடுபட்டம்-காதுக்குநேரான திருகெற்றிசுட்டி-சந்திர
பிறைசூரியபிறை தலைநிறைந்தசாமான்- தளதளெனகாந்
திபுடன் தங்கஒட்டியாணம்-பாதசரஞ்சதங்கொலுசு சில
ம்பு தண்டைபாட்டில்-பத்துவிரல்மோதிரங்கள் மிஞ்சியுட
ன்மெட்டு-காதுக்குசவுக் ளிகள் கல் லிழைத்தஜோடி-கண்
டசரமபதக்கங்கள்முத்துமாலைபூரியம்- கையிலிடுமோதிர
ங்கள்முத்திரைசிகாயம் - கல்லிழைத்தபெருங்கடுக்கன்த
ங்கவளை அரைஞாண்-மார்நிறைந்தபொன்னூல் மகாகுண்டல
ங்கள்-மண்டலத்துஜெனங்களுக்குவாங்கநல்லநகைகள்-

ஆபரணவகையெல்லாமணியணியாய்வைத்து-அதற்கேற்றபெட்டிகள்பூட்டுகள்சாவி-மோராவிராகன்கள்சாணாக்காசு-மேலானசீர்மையார்முத்திரைகள்ரூபாய்-ஆதிலேயுண்டானஸ்ரீராமர்மேடை-அதுகளைச்சார்ந்தபொருகாசுபணந்துட்டு-அரக்குமுத்திரைவைத்து அடையாளங்கட்டி-அடையாளமாகவேகாசுபணமெல்லாம்-அந்தந்தவிடத்திலபத்திரங்கள்பண்ணி-சிறுமுத்து பெருமுத்துசிறுராசிமுத்து-சூரத்தில்விளைந்துவருஞ்சுண்டைக்காய்முத்துபருத்தமுத்துபெருத்தமுத்துபவழநிறமுத்து-பம்பாயிசீர்மையிலேவிளைந்துவருமுத்து-கடைந்தமுத்துஉருண்டமுத்துகட்டாணிமுத்து-கருங்கடலில்விளைந்துவருங்காக்கியுள்ளமுத்து-வாளிமுத்துநீலமுத்து வார்கட்டைமுத்து-வையகத்துஜெனங்களுக்குவாங்கநல்லமுத்து-ஒட்டுமுத்துதங்கமுத்துசுட்டிமுத்துநல்ல ஒப்பில்லாமாணிக்கசிவாத்தினங்கள்-கோவர்த்தனகிரியில்வாங்கிவந்தமுத்து கோபாலகிருஷ்ணருக்குசாத்தநல்லமுத்து அயோத்தியாபுரியில்வாங்கிவந்தமுத்து-அபிராமிலட்சுமணருக்குசாத்தநல்லமுத்து-காசிதேசத்திலவாங்கிவந்தமுத்து-கனபானவர்த்தகர்கள்விலைமதித்தமுத்து-பாசபுரிசீர்மையிலேவாரிவந்தவச்சிரம்-பலயானவர்த்தகர்கள்விலைமதித்தவச்சிரம்-குடகுதேசத்திலேவாங்கிவந்தகெட்பு-கோடிசனவர்த்தகர்கள்விலைமதித்தகெம்பு-டில்விதேசத்தில்வாங்கிவந்

தபச்சை-தேசத்துவர்த்தகர்கள்விலைமதித்தபச்சைநாலு
தேசத்தில்வாங்கிவந்தரத்தினம்- நகர்சென்னைபட்டணத்
துரைகள்வந்திறங்க-தங்கக்கட்டிவெள்ளிகட்டிதனித்தனி
யாய்வரவே-ராம்பரம்வெண்கலங்கள் பித்தளைதூராக்கள்-
இருப்புசட்டம்ஈயக்கட்டிபெருங்கம்பிநல்ல-இதுகளைச்சா
ர்ந்தகொருதண்டவாளங்கள்- சீர்மைமண்சாடிகள்சின்ன
சின்னகுப்பி-சீசாக்கள்வளையோடு பீங்கான்கள்கிண்ணி-
திராவகம்பிராந்திகள்சாராயப்பீப்பாய்-தனித்தனியாயங்
கங்கஇடங்களிலேவைத்து-பச்சைகள்நீலம் குளோப்புக
ண்ணாடி-பச்சையில்பெரியதாயபன்னீருகுப்பி-கண்ணாடி
கதவுகள்கைபெட்டிமேஜை- கவுசிகள்குர்ச்சிகள் கட்டி
லோடுகொட்டில்-மெத்தைகள்திண்டுகள்பில்லைதலைக்கா
ணி-விதவிதமாய்மேற்கட்டுபோகுந்துறைசாமான்- மெ
ழுகுசீலைகூடாரமேக்குகள்வேம்பு- விதவிதமாய்சிலைமா
ய்குலலாக்கள்சொக்காய்-அரக்குவத்திமெழுகுவத்தி அ
தற்கேற்றபீடங்கள் - அலங்காரகூடங்கள்மெழுக்குவத்
திராந்தல்-கனைக ளக்கதிகோடி காந்தியுள்ளவிளக்கு- க
ண்ணுக்குஅழகானரசகுண்டுவரிசை-சதிருக்குஅழகான
சாயபொம்மைகளும்- சாய்ந்திருக்குந்திண்டுகள் சரிகை
மேற்கட்டு-தங்கமொடுவெள்ளிகள் தட்டுதாம்பாளம்-ச
துருக்குளதககொருசாதிக்காய்பத்ரி- தகுமானவால்மிள
குலவங்கமொடுபெட்டி - வெற்றிலைபடித்துகோர்க்கும்

வெள்ளியிர்க்குகளும்-விதவிதமாய்ப்பன்னிருகுப்பியோ
டுகின்ணி- பட்டுப்பாய்பிரப்பம்பாய்படுத்திருக்கும்பாவி
ய்பாய்-பட்டணத்துதுரைகளுக்கு கெட்டிதாழம்பாய்ப
ட்டுரத்தினக்கம்பளிகள்ஜோடுசமக்காளம் - பந்தலுக்கு
யேத்ததொருமட்டபிரப்பம்பாய்-கண்ணாடி காம்பிராக்க
ள்கட்டில்கள்சோப்பா-காட்டினிலேயுள்ள கலைமான்கள்
கொம்பு-கறுத்திருக்குஞ்சவரிநல்லவெண்சாமரங்கள்- கி
ருஷ்ணசலபெட்டிபுலித்தோல்கள்நல்ல- உட்கார்ந்துசெ
பம்பண்ணுஞ்சித்திராசனங்கள்- பட்டுகுடைவெள்ளிகு
டைபச்சைகுடைநீலம்-பவழகுடைமுத்துகுடைதங்கசகு
டைவெள்ளை வீசிவரும்பாவாடைவெள்ளித்தடிகள்-வே
டிக்கையாகவே கப்பலில்வரவே - தாளிபனைஓலைகள் சீர்
மைகடுகாசி-பேனுக்கள்பிங்கிபுட்டி பிரப்பங்கட்டுபீங்கா
ன்-கோழிகள்சேவுகள்சுவடிடலகைகள்-சிறுராசிபெறு
ராசிஆடும்பலகைகள்- சங்குகள்பாலாடை சாக்குமித்த
லைகள்-சட்டமாய்க்கப்பலிலேதிட்டமாய்க்கட்டி அஷ்ட
லட்சுமிபொழியும்ஆனந்தகப்பல் அளவற்றபாக்கியங்கள்
குறைவற்றசெல்வம்- நித்தியலட்சுமிபொழியுந்திருவல்
லிக்கேணி நினைத்தவரங்கொடுப்பாளந்த வேதவல்லித்
தாயார்-இஷ்டமுள்ளலட்சுமிகடாட்சத்தினாலே- ஏற்றமு
ள்ளகப்பல்வந்துசேர்ந்துதையாகவாமி (ஏலேலோ)

(சரூர்) போனாசுவாதம்பச்சிலேகள் தினுசு- பெரு வியாதிரோகமறுஞ்சஞ்சீவிமருந்து- சயரோகந்திமிர்வாயுதனுர்வாயுரோகம்-சரிமேகம்காமாலே மார்நோவுகுன்மம்-கண்குருடுசெவிடுகள்கால்மொண்டிமுடங்கள்-கண்காசபடலங்கள் வாங்குநல்லமருந்து - மண்டையிடிதொண்டைகட்டுமகத்தானரோகம்-மாளாதவியாதிகள்தீர்க்கநல்லமருந்து- திக்குதெரியாதவர் திகைகெட்டபேர்க்கு-திவ்யஞ்சனம்நல்லசீமைமைதலங்கள்- தேசத்துசெனங்களுக்குசெயமுள்ளமருந்து-தேகமெல்லாஞ்சுந்தரமாய் அழகுதருமருந்து-உலகத்துசனங்களுக்குஉபகாரமருந்து-ஒருநாளும்வியாதிகள்வாராதமருந்து-மனிதர்க்குள் சீர்மையில்சொரணைகெட்டபேர்க்கு-மதனகாமேசுரம் அவிழ்தகஞ்சாக்கள்-குல்கந்துவில்வாதிலேகியந்தானும் - கீழ்நாடுமேல்நாடுபேர்பெற்றமருந்து-மருந்துவகைதினுசுஎல்லாம்வகைவகையாய்வைத்து-மற்றுமந்தகப்பலிலேஆளமட்டுஞ்சாமான்-கதவுகுழையிரும்புசட்டம்கைப்பிடிகள்வளையம்-கட்டிலுக்குந்தொட்டிலுக்குமூலசட்டசாமான்-தலேக்கடைக்கதவுகள்கைப்பிடிக்குங்குழைகள்- வைரத்தூண்கம்பங்கள்வெண்கலப்படங்கள்-சாரங்கள்தளங்கள்சங்கிலிகுப்பி - தாவாரப்பெட்டிக்குநடுப்பூட்டுசாவி- காடைவிளக்குகள்கைவிளக்குநல்ல- கலியாணப்பந்தலுக்கு

யேற்றகுத்துவிளக்கு - தூங்காவிளக்குகள் தூங்குமலை
கொளுசு-தொட்டிலுக்குசங்கிலிகள்தோசைகல்லுதுடுப்
பு - மண்ணுருவான வாணாய்காண்டி - மண்வெட்டி
கள்நல்ல வெட்டுகுந்தாலி - சோடாலிபிஸ்தோல் துபா
க்கிகள் பீரங்கிகுண்டு - பல்லயம்யீட்டிகள் பாங்குகட்
டாரி - கெடியாரீமணிக்கம்பம் கும்பினிகள்பாறு - க
ணைக்குவளைகதுகைசொல்லஇட்டசம்பிரதிகள்-ஆயுதங்கத்
திகள்அலைமான்துருப்பு- ஆழத்துமீன்தெரியகச்சுகுழல்
கொம்பு-ஆனைகள்குதிரைகள் ஆயிரங்காலால்- ஆந்தேதாவி
மேனுக்கள்பல்லாக்குடோலி-கோரதங்கள்கூண்டுபண்டி
சக்காங்கள்சட்டம் - குதிரைகட்டு சாரட்டுதண்டிகைக
ளோடே-மான்கொளுபெயிலுகள்பாடப்புருவும்-மைனு
க்கள்பாத்துகள் பஞ்சவர்ணக்கிளிகள்- பால்கறக்கநல்லப
சுக்களோடெருமை-பச்சைவெண்ணெய் கடைந்தெடுக்
கமாங்கொளுமற்றும்-சீர்மையெலி பெருச்சாளிஉறுத்
தையொடுமுயல்கள்-தேவாங்கருங்குறங்குபுனுகுபூனைக
ளும்-செந்நாய்காடிசிவிங்கிகொண்டமுசலுப- சீர்மைநா
ய்வேட்டைநாய்இன்னமின்னசாதிகடயனைபகள்உடும்புக
ள்கோவேறுகழுதை-கண்ணுக்குகோரமான நீர்மனுஷசாதி
விதவிதமாய்கப்பலில்வேடிக்கையாக- வேகமுடன்கப்ப
லிலேவிசையோடம்வாலே-சிறுமீன்கள் பெருமீன்கள்சி

தறியங்கே யோட-மலைபோலே மீன்களெல்லாம்வந்து கேஙிற்க-தவட்டுமாகலந்துமேசமைத்தகொழுக்கட்டை-தாமதங்களில்லாமலெடுத்துமுன்போட்டு- அலைகடல்வழியெல்லாம்ஒருநொடியில்தாண்டி- ஆனந்தகப்பல்வந்துசேர்ந்துதையாசுவாமி(ஏலேலோ)

சங்கயமாபருவதத்தில்நல்ல-சந்தனத்தால்சேர்ந்தகப்பல்-மண்டலத்துஜனங்களுக்கு-நல்ல- மாளிகைக்குமாதினுசு-பட்டணத்துஜனங்களுக்கு-நல்ல- பலவிதமாம்பலதினுசு.

(சரூர்) சதுர்கட்குந்திமானைஎலுமிச்சம்பழங்கள்-சாதிநார்த்தம்பழச்சக்கரையன்னசி-செவ்வாழைப்பழைக்குலைகள்சேர்ந்தரஸ்தாளி-செவ்விளநீர்சீர்மையத்திப்பழங்கள்-கிளிமூக்குமாம்பழம்மணியிலாக்கிச்சிலி - வகையானமாதளம்பழங்களொடுதினுசு- சீத்தாப்பலாப்பழம்சொகுசானசீனி-செடிநாரத்தைகொடிநாரத்தை சீமைக்கிச்சிலிகள - கொய்யாப்பழம்நல்லகொத்து தீராட்சிப்பழம்-கொடிதனில்விட்டுவரும்கட்டுமாம்பழங்கள்-பேரீச்சம்பழம்நல்லபருப்புகற்கண்டு - போனகச் சூரிகாய்களொடுதினுசு-பட்டாணிமுந்திரிப்பருப்புகளதினுசுபழவகைகளதினுசெல்லாம்விதவிதமாய்வைத்து-பங்காளக்கப்பலிலேபணியாரதினுசும்- தொட்டுப்பால்மனோகாம்

தேன்குழல்பூரி-துளளுமங்கஅதிரசம்பாற் குழம்புலட்டு
சோமாசியென்பதுபேணியதுவாகும்- தினுனும்வகைப
லகாரமின்னமின்னங்கொண்டு-சகிபிண்ட பிமனுக்குசற்
கரையிட்டாயும்-சாரமுள்ளபாலன்னந்தயிர்வெண்ணெய்
பாலும் - புளியோரைததியன்னம்பொங்கல் வடைதோ
சை போகமாயடிசல்செய்யும்இட்டளிகள்நல்ல - சக்கரா
ன்னங்களொடுமுளகோரையுண்டை- அக்காவடிசில்கள்
பங்காளபாத்து- வேதவல்லித்தாயார் அடிசில்செய்யும்வ
கையை - பணியாரமின்னதென்றுகணக்கிடப்போமோ-
பார்த்தசாரதிதேவி அடிசல்செய்யும்வகையை- பணியார
வகைதினுசுவகைகள்பரிபளங்கள்- பலவிதமாய்வீசிவரு
ம் புஷ்பவிதசாதி-சம்பங்கிபுஷ்பங்கள்சாதிமல்லிகைகள்
சாங்கனொடுமாலை கட்டிகுருவேர்கள்தவனம் -பன்னீரு
புஷ்பங்கள்பங்கிபுஷ்பங்கள்- பட்டுசாமந்திகள்பலவிதங்
கள்சாதி-செண்பகப்பூநல்லசெங்கழுநீராம்பல்- சிறுசெ
ண்பகத்தோடுசேர்ந்தவனமல்லி-நீலவர்னப்புஷ்பங்கள்நீ
ண்டவிருவாட்சி-மேலான சுரபுன்னைமுல்லைசெந்தாழை-
புஷ்பவகைஆயிரங்கள்பொட்டளங்கள்கட்டி- பேர்பெற்
றகப்பலிலேஇன்னமின்னந்தினுசு- கல்தேக்குநெல்தேக்
குகாட்டிலுள்ளமரங்கள்-கரிவோடு இரிவோடுகருப்புமர
ஞ்சாதி - வெண்தேக்குபூந்தேக்கு வெட்பாலைமரங்கள்-

சிறுவேங்கைபெருவேங்கைசீமைபலாமரங்கள்- சேர்ந்த தொருவயிரங்களானநல்லபட்டை- மச்சுகட்டுமாளிகைக் குஅச்சுவெட்டும்பலகை- மதனகால்புள்ளிசட்டம்மாதிரிப் பலகை-குதிரைப்பட்டைக்குநவிக்காறு த்துக்கால்சட்ட ம்-கூடத்துக்கம்பங்கள்சரங்களொடுதூலம்- வெழுல்கட் டுந்தாரவிகள்வாசற்கால்கதவு- மாளிகைக்குநல்லநல்லவ கைவகையாய்மரங்கள்-ஈட்டிகள்கல்வாட்சிபல ஆரைகத வு-கீழ்மெத்தைமேன்மெத்தைதாங்குநல்லசரங்கள்-அல மாரிக்கதகவுள் ஆள்களுக்குமணைகள்- அழகானவிசுப்பல கைநாற்காலிமணைகள்- மரங்கள் வகைதினுசெல்லாம்வ கைவகையாய்வைத்து - மகாகனமாய்க்கப்பலிலே வா த்தியங்கள்கோஷ்டம் - முகவீணைநாகசரம்விருதுகள்பே ரி-மேளமொடுதாளங்கள்விருதுசின்னங்கள்- தாளமொ டுமத்தளம்கருமவாத்தியங்கள் - இதுகளுக்குமேலானகி டுகிடுவாத்தியங்கள்- காளாஞ்சிதுத்தரிகனகதப்பட்டை- புள்ளாங்குழல்நாதம்பிட்டிலவாத்தியங்கள் - பெருங்கா ளைக்களேசாரங்கிவாத்தியம் - பாம்புநாகசுரம்பதினெ ட்டுவாத்தியம்-பாகவதகோஷ்டங்கள் சங்கீர்த்தனம்- வீணையொடுசின்னங்கள்வேதார்த்தவேதியங்கள் -தாம் தாமென்றுகப்பலிலேசட்டமுடன்வரவே- அதிர்வேட்டு கில்புருசுஆகாசபாணம்- அழகானமத்தாப்புலேந்துநலபா

ணம்-பொரிபாணம்வெடிபாணம்இடிபாணவித்தை- புஷ்
பபாணம்நல்லகப்பல்பாணங்கள்- சுழல்பாணம்-உழல்பா
ணம்சீறிவரும்பாணம்-சீமையில்செய்துவரும்பலவிதபா
ணங்கள்-கம்பபாணம்நல்லகையில் விடும்பாணம்- காந்தி
யுள நட்சத்திரபாணங்கள் தினுசு - நீலவர்னபாணமொடு
சூரியபாணங்கள்-ரீரீயெனப் பேசிவரும்தவளேபாணங்க
ள்-பாணவகைதினுசெல்லாம் பத்திரமாய்வைத்து-பாங்
கானகப்பலிலேபலதேசச்சரக்குகொச்சிதேசம்நல்ல- கு
டகுதேசங்கள்கோசலபுரங்கள்கோபுரங்கள் யக்கண
ங்கள்-கர்னாடதேசம்காஞ்சீபுரம்நல்ல- காவேரிதீரம்கண்
ணூடிபாயும்-நல்ல சோழதேசங்கள் மலையாளமோடுமது
ரைதெற்குதேசங்கள் - சனுகைபெட்டு திருநெல்வேலி
யொடுசீமை-மண்டலங்கள்துண்டீரநகரங்கள்தேசம்- கு
ற்றாலங்குறனாடுகுமப்கோணதேசம - கோதாவரிதீரங்
கொண்டவட்டிசீமை-ஏபாளநேபாளபங்காளதேசம்- வா
ய்சொல்லுதெரியாதமாறுபாடிதேசம் - இராச்சியத்தில்
செழிப்புடைமகூருதேசம்-நடுச்சோழமண்டலம் நாகரீகக்
காஞ்சி- அங்கதேசம்நல்லவங்கதேசங்கள் - அதுகட்கு
மேலானஇன்னமின்னுந்தேசம்நல்லகலிங்கதேசங்கள்- க
ண்ணூறுபாயும்நல்லகலக்கத்தாசீமை-டில்லிதேசம்நல்ல
சிந்துதேசங்கள்திக்குதெரியாததொருராணிதேசங்கள்த
வறுதப்புரிநல்லகேதாரபுரமும்-வாரணுகுருக்ஷேத்திரவ

டம துரைபத்திரங்கரோந்தரி-நல்லகண்டகோதிரம் கீழ்நா டுமேல்நாடுதென்னாடுதேசம்-பப்பாதேசத்தில்-சாக்குக ள்கொண்டு-திக்குதிக்காய்க்கப்பலெல்லாம் ஒருவழியாய்ச் சேர்ந்து-ஸ்ரீராமஜெயமென்றுஎழுப்பிவேகப்பல- துடிப்புகள்காட்டியவாள்ஜலங்களையொதுக்கு-சீர்பொழியுங்கப்பல்வருஞ்செய்தியைக்கேட்டு-திக்குதிக்குகள்தோறும் வேட்டுகள்போட்டு-சிங்கக்கொடிகட்டிசிங்காரமாக-ஜெயமுள்ளகப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி(ஏலேலோ) ஞா

லகமெல்லாம்பெற்றெடுத்தஅம்மாள-உத்தமியாள்பத்தினியேமகிமையுடன்தேகமெல்லாம்- வந்தருளும் கப்பலிலே.

(சஞர்) மலையாளங்கோங்குடன்கிலேசேருமுடனே மைசூரு களசுதூருவங்கேமகிழ்ந்துகனமானகோயில்டி நீளங்காடுயிரேகண்டியூர் திருக்காடி பள்ளிசெம்பலகை கோலமுள்ளதிருவையாறுதிருக்தலூர் துறைகொஞ்சும் பசும்பெதிர்கோதில ஞ்சைநகர் கண்டுதன்னவண்மைக் காவல்உண்மையைப்பார்த்து- தானுமாய்ப்பாய்மரம்மூன்றுபதினறு நன்மையென்றுந்தேனுலேசீனிக்கலப்பு- நற்பமுடன்சொற்றமாய்கற்பமாய்ப்பாரு- தந்திரமான நல்லதுப்பாக்கிரட்டிசிராய்- கடுகட்டுசொருகுசுடனேகட்டி தூங்கு-மஞ்சசப்ரமுடன்கட்டினர்தாவி-அந்தந்தேச

த்துக்கதிபதிகளாகிய - இஷ்டாங்கமாகக்கொண்டுசாஷ்டாங்கமாய்-வரச்சே(சுருக்கச்சொல்) பாதியுடனேஉலாத்தா-இங்கிலீசுபிராஞ்சுலாட்டுமேலாட்டு-அனைகாளைப்பிட்டுநீரின்மேலநெருப்பு கொண்டேபணிக் கொருபிராங்கி தீர்த்துக்குமுகமுடன்கப்பலிதுசமுக-நிறைகண்டுதொண்டெல்லாம்புகழும்- வேதவல்லிக்தாயார் தூரிதமுடன் கப்பலில்-சேர்தப்பாமல்வருகுதப்பா(ஏலேலோ) ௬

அதிபதியாள் அன்னக்கொடி அம்பாள்-தருமநிதிபுண்ணியவதி அம்பாள்கப்பல்-சடலோட்டம்தந்தையாஅனைகொடியிலவருகுதிங்கே.

(சரூர்) அந்தியேசே மமண்டமதுகடந்து-அந்தந்தசேதவஸ்தலங்களதுகண்டு- கனமுள்ளமழைபொழியும் அகமாறுராகம்-கனகதகொருக்கு விளையும மற்றுமுள்ளசீமை-அவ்வூரிகப்பலிதுஅூகமாக- அனபுடனேகைத்தில் லனைலதுனைகூடி இருகாதுகொப்புஇரட்டைஒட்டியாணம் - இலட்சமபொன் பெற்றதொருபச்சைவடமகொண்டு பொண்டுக்கு கொடுத்தேபணிந்து-கோலமுள்ளகப்பலுக்குமேலும்வழிகாட்டி-சிலமுள்ளகபபலிதுவழிகளைல நதாணடி- சென்னப்பட்டணமகனைவந்தும்சாந்துமையாசுவாமி(ஏலேலோ) ஏ

உததமியள் வேதவல்லி பதினியாள் கப்பலிது-சித்தமுள்ளபட்டணத்தில் சேர்ந்ததென்று தான்பாட-

(சரூர்) உலகமாதாவேஉத்தமிகாமாட்சி- உமைய வள்தன்னருள்உத்தாரம்பெற்று-அவையுமிந்தக்கப்பலு க்குசமையமதுபார்த்து-ஆகாரங்கண்டெடுத்து அடித்த ட்டில்சேர்த்து-ஸ்ரீகாரககண்டெடுதது சிக்கத்திருப்பி-காகாரங்கண்டெடுத்துகப்பிகயர்கட்டி -நமசிவாயங்கொ ண்டுநங்கூரம்பாச்சி-நாலுவேதத்தாலே பீரங்கியேற்றி-அஷ்டாக்ஷரத்தாலேகாற்றுகளும்பாய- அம்மனுடசப்ப விதுவிஸ்காரமாக-அன்பாகக்கணபதியை முன்பாகவை த்து - அந்தமுடன் கப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி (ஏலேலோ)

கப்பலென்றால்கப்பலிதுநல்ல - சனமுடையகப்ப லிது கப்பல்வரும்பளுவதனால்சலங்கள் கரைபுரண்டுகுமி ளமிடும்இருகரையுமநீர்பெருகிகத்தையா-ஏகசலம்வழிந் திடுமாம்வேதவல்லியதுவறிந்து- அம்மன்காவேரியையு ச்சரித்தாள். அ

(சரூர்)காவேரிதானறிந்து வேசவல்லித்தாய்மேல்-லிகடாக்ஷம்வைகதுகப்பல் ஊதுறைபொணர்ந்துசேர்க் க-கரைபுரணடுகாவேரிவெகுவெள்ளம்வரவே- அம்மனு டதங்யகிமைஆறிவரொன்று-ஆதிரங்கர் சந்நிதிக்குப்பி ன்பாகவேதான்-அலேவந்துயோதவேகரைதனிலே யொ

துக்கி-உத்தாரபாரிசம்ஒருபக்கந்திரும்பி-ஓங்காரமாகவே
உருண்டானமணல்-வாரிசத்தமிட்டுதத்தளித்துதான்புர
ண்டு-கப்பல்சதாகாலம்அம்மனைசிந்தை - தனிவெண்ணி
வேதவல்லித்தாயாரைதியானமதுபண்ணி-வேகமுடன்
இங்குவந்தகப்பலிதுகண்டீர் (ஏலேலோ. ௬

வாழியவேவாழியவேரத்நமகமேருவாழியவே-ஈஸ்
வரரும்பார்வதியும்தத்தையா இன்பமுடன்வாழியவே -
மகாவிஷ்ணுலட்சுமியும கோவிந்தாமண்டலத்தில்வாழி
யவே-பிர்மாவும்சரஸ்வதியுமதத்தையா பூமிதனில்வாழி
யவே.

(சரூர்) தேவேந்திரனிந்திராணிதேவர்களும்வாழி-
திறமுள்ளமுனிவர்களும்சித்தர்களும்வாழி - முப்பத்து
முக்கோடிதேவர்களுமவாழி-முதலானநாரதரும்கிம்புரு
டர்வாழி நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுமேவாழி- கலை
முள்ளகருடகாந்தருவர்களும்வாழி விக்கினவிநாயகரும்
நித்தமிகவாழி-வேலவரும்பத்தினிகளிருவர்களும்வாழி
ஸ்ரீரங்க நாயகரும்ரங்கநாயகியும் சிலகாரணமானபார்த்த
சாரதியும்-சீரானவேதவல்லித்தாயாரும்வாழி- மேலான
சென்னைபுரிஆளுகின்றதுரை கள்மேன்மேலும் எந்நாளு
ம்வாழிநிகவாழி-சூப்பிரீங்கோட்டிலுள்ள துரைகளெ
ல்லாம்வாழி- தருப்பிடித்துவழக்கெடுக்கும் எல்லட்டும

வாழி-இன்னஞ்சிலதேசங்களை ஆளுகின்றராசா இணையில்லாசெல்வங்கள்பெற்றுமவர்வாழி- சீலமுள்ளகப்பல்கவிகற்றவர்கள்கேட்டோர்சிறப்பாய்படிப்போர்கள்ஜெயம்பெற்றுவாழி மேலான இப்புவியிலுள்ள வானைத்தும் மென்மேலும் எந்நாளுமவாழிமிகவாழி (ஏலேலோ) (ஏலேலோ) ம

பார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு ஏலப்பாட்டு.

முற்றிற்று.